

தலைமைச் செயலகத்தில் நேற்று (18.07.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள 'தி இந்து' நாளிதழின் முன்னாள் ஆசிரியர் ஏ. எஸ்.. பன்னீர்செல்வம், நிருவாகக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள 'தி இந்து' குழுமத்தின் இயக்குநர் மற்றும் 'தி இந்து' நாளிதழின் முன்னாள் தலைமை ஆசிரியர் என். ரவி ஆகியோரிடம் நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், தொழிலாளர் ஆணையர் / சிறப்புப் பணி, சென்னை இதழியல் கல்வி நிறுவனம் எஸ்.ஏ. ராமன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் திருவண்ணாமலையில் நடைபெற்ற தலைமையாசிரியர்களுடனான கற்றல் அடைவு குறித்து ஆய்வுக் கூட்டத்தில் 'தமிழ்நாடு வாழ்க' என முழக்கமிடப்பட்டது. அமைச்சர் தமிழ்நாடு எனச் சொல்ல தலைமையாசிரியர்களும், மாவட்ட ஆட்சியர் உட்பட அரசு அலுவலர்களும் 'வாழ்க' என முழக்கமிட்டார்கள்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் –

# ஆடி அம்மன் சுற்றுலா தொகுப்பில் - 160 பயணிகளுடன் ஆன்மிகச் சுற்றுலா வாகனங்கள்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – இரா.இராஜேந்திரன் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்!

சென்னை, ஜூலை 19 -

தமிழ்நாடு சுற்றுலாத் துறை சார்பில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ஆன்மீக சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களை தரிசனம் செய்யும் வகையில் ஒரு நாள் ஆடி அம்மன் தொகுப்பு சுற்றுலா நிகழ்வினை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை பிராட்வேயில் அமைந்துள்ள காளிகாம்பாள் அம்மன் திருக்கோவில் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் 160 பயணிகளுடன் கூடிய ஆன்மீக சுற்றுலா வாகனங்களை நேற்று (18.07.2025) கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மேயர் திருமதி ஆர். பிரியா, சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிருஸ்துராஜ், இராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் இசட். ஆசாத் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், இந்த ஒரு நாள் ஆடி அம்மன் தொகுப்பு சுற்றுலாவானது 18.07.2025 அன்று முதல் 15.08.2025 வரை காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஒரு மாத காலத்திற்கு செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இயக்கப்படுகிறது.

ஒரு நாள் ஆடி அம்மன் தொகுப்பு சுற்றுலா விவரங்கள் பின்வருமாறு :

ஆடி அம்மன் சுற்றுலா சென்னை தொகுப்பு 1 (ஒரே நாளில் 8 அம்மன் கோவில்கள்)

சென்னை திருவல்லிகேணி சுற்றுலா வளாகத்திலிருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோவில், பாரிமுனை அங்காள பரமேஸ்வரி திருக்கோவில், இராயபுரம் வடிவுடையம்மன் திருக்கோவில், திருவொற்றியூர் பவானி அம்மன் திருக்கோவில், பெரிய பாளையம் - அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில், புட்லூர் திருவுடையம்மன் திருக்கோவில், திருமுல்லைவாயில் பச்சையம்மன் திருக்கோவில், திருமுல்லைவாயில் பாலியம்மன் திருக்கோவில், வில்லிவாக்கம் ஆகிய திருக்கோயில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றுலாவில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1000/.

**ஆடி அம்மன் சுற்றுலா சென்னை தொகுப்பு 2 (ஒரே நாளில் 10 அம்மன் கோவில்கள்)**

சென்னை திருவல்லிகேணி சுற்றுலா வளாகத்திலிருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு கற்பகாம்பாள் திருக்கோவில், மைலாப்பூர் - முண்டகண்ணி அம்மன் திருக்கோவில், மைலாப்பூர் கோலவிழியம்மன் திருக்கோவில், மைலாப்பூர் - ஆலயம்மன் திருக்கோவில், தேனாம்பேட்டை முப்பாத்தம்மன் திருக்கோவில், தி.நகர் - அருள்மிகு பிடாரி இளங்காளி அம்மன் திருக்கோவில், சைதாப்பேட்டை அஷ்டலெஷ்மி திருக்கோவில், பெசண்ட் நகர் - காமாட்சி அம்மன் திருக்கோவில், மாங்காடு தேவி கருமாரியம்மன் திரு க்கோவில், திருவேற்காடு பாதாள பொன்னியம்மன் திருக்கோவில், கீழ்பாக்கம் ஆகிய திருக்கோயில்களை கண்டு தரிசனம் செய்து வரும்வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றுலாவில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.800/

**ஆடி அம்மன் சுற்றுலா மதுரை தொகுப்பு**

மதுரை, ஓட்டல் தமிழ்நாடு, அழகர் கோயில் சாலையிலிருந்து மீனாட்சி அம்மன் திருக்கோவில், மதுரை - மாரியம்மன் திருக்கோவில், வண்டியூர் காளியம்மன் திருக்கோவில், மடப்புரம் வெட்டுடையார் காளியம்மன் திருக்கோவில், விட்டனேரி - முத்து மாரியம்மன் திருக்கோவில், தாயமங்கலம் - ராக்காயி அம்மன் திருக்கோவில், அழகர் கோவில் ஆகிய திருக்கோயில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றுலாவில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு, அனைத்து கோவில்களிலும் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1400/.

**ஆடி அம்மன் சுற்றுலா திருச்சி தொகுப்பு**

திருச்சியில் வெக்காளியம்மன் திருக்கோவில், உறையூர் கமலவல்லி நாச்சியார் திருக்கோவில், உறையூர் அகிலாண்டேஸ்வரி திருக்கோவில், திருவானைக்காவல் மாரியம்மன் திருக்கோவில், சமயபுரம் உஜ்ஜயினி மாகாளி அம்மன் திருக்கோவில், சமயபுரம் மதுர காளியம்மன் திருக்கோவில், சிறுவாச்சூர் பொன்னேஸ்வரி அம்மன் திருக்கோவில், பொன்மலை - உக்கிர காளியம்மன் திருக்கோவில், திருச்சி ஆகிய திருக்கோயில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றுலாவில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1100/.

**ஆடி அம்மன் சுற்றுலா தஞ்சாவூர் தொகுப்பு**


வராகி அம்மன் (பெரிய கோவில்) திருக்கோவில், தஞ்சாவூர் - பங்காரு காமாட்சி அம்மன் திருக்கோவில், தஞ்சாவூர் - மகா மாரியம்மன் திருக்கோவில், புன்னை நல்லூர் - கற்பரட்சாம்பிகை திருக்கோவில், திருக்கருகாவூர் - துர்கை அம்மன் திருக்கோவில், பட்டீஸ்வரம் - பாடைகட்டி மகா மாரியம்மன் திருக்கோவில், வலங்கைமான் - நாகநாத சுவாமி கிரிகு ஜாம்பிகை திருக்கோவில், திருநாகேஸ்வரம் - காசி விஸ்வநாதர் விசாலாட்சி திருக்கோவில், மகாமககுளம், கும்பகோணம் - ஐராவதேசுவரர் (பெரியநாயகி அம்மன்) திருக்கோவில், தாராசுரம் ஆகிய திருக்கோயில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றுலாவில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1400/ .

இச்சுற்றுலாக்களில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு, அனைத்து கோவில்களின் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே சுற்றுலாப் பயணிகள், ஆன்மீக அன்பர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள அம்மன் கோவில்களை ஆன்மீக சுற்றுலாப் பயணிகள் தரிசிக்கும் பொருட்டு, 5 நாட்கள் 108 அம்மன் கோவில் கள் சுற்றுலா விற்கும், ஆடி மாத அமாவாசை தினத்தை முன்னிட்டு 3 நாட்கள் இராமேஸ்வரம் (ஆடி அமாவாசை) சுற்றுலா விற்கும் முன்பதிவு தொடங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இந்தச் சுற்றுலாக்களுக்கு http://www.ttdconline.com என்ற இணையத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், விவரங்களுக்கு 180042531111, 044 25333333, 04425333444 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாறு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





முதலமைச்சர் – கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு–144, மதுரவாயல், ஸ்ரீ பாக்கியலட்சுமி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் நேற்று (18.07.2025) மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி பார்வையிட்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் பரிசீலனை செய்து சேவைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மண்டலம்–11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் எம்.இ.ஸ்டாலின் எம்.சி., பகுதி பொருளாளர் ம.உதயகுமார், மாவட்ட பிரதிநிதி கே.ராஜ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### கீழ்ப்பாக்கத்தில் புதிதாக பெயர் சூட்டப்பட்ட

# பேராயர் எஸ்றா சற்குணம் சாலை பெயர்ப்பலகை!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

சென்னை, ஜூலை 19-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு100, கீழ்ப்பாக்கத் தில் பேராயர் எஸ்ரா சற்குணம் அவர்கள் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள சாலைக்கு புதிதாக பெயர் சூட்டப் பட்ட பேராயர் எஸ்றா சற்குணம் சாலை பெயர்ப் பலகையினை நேற்று (18.07.2025) திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு133 மற்றும் வார்டு141க்குட்பட்ட தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் பிரதான சாலையில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ரூ.164.92 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த மேம்பாலமானது, தெற்கு உஸ்மான் சாலை பர்கிட் சாலை மேட்லி சாலை ஆகியவற்றின் சந்திப்பு, தெற்கு உஸ்மான் சாலை தென்மேற்கு போக் சாலை நியூ போக் சாலை ஆகியவற்றின் சந்திப்பு, தெற்கு உஸ்மான் சாலை சி.ஐ.டி நகர் வடக்கு சாலை சந்திப்பு ஆகியவற்றில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பாலம் 1,200 மீ. நீளம் மற்றும் 8.40 மீ. அகலத்தில் இருவழிப்பாதையாக அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், சி.ஐ.டி.நகர் பிரதான சாலையில் 140 மீ. உஸ்மான் சாலையில் ஏறுவதற்கு 120 மீ., இறங்குவதற்கு 100மீ. நீளத்தில் அணுகு பகுதிகளுடனும், இருபுறமும் 4 மீ. மற்றும் இரு முனைகளிலும் 1.5 மீ. நடைபாதைகளுடன் சேவை சாலைகள் மற்றும் 53 தூண்களுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

பின்னர், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு133, தியாகராயநகர், பிரகாசம் சாலையில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் நேற்று (18.07.2025) முதல் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட இணையம் சார்ந்த தற்சார்புத் தொழிலாளர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வுக் கூடத்தினைப் (Gig Workers Lounge) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கிருந்த தற்சார்புத் தொழிலாளர்களுடன் கலந்துரையாடினார். தற்சார்புத் தொழிலாளர்கள் தங்களுக்கு இந்த ஓய்வுக்கூடம் இளைப்பாறுவதற்கும், உற்சாகமாக பணியினைத் தொடர்வதற்கும் மிகுந்த பயனுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது என அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

இந்த ஓய்வுக்கூடத்தில் இருக்கை வசதிகள், கழிவறை, ஸ்மார்ட் ஃபோன் சார்ஜிங் வசதிகள், குடிநீர் வசதிகள் மற்றும் கண்காணிப்பு கேமரா உள்ளிட்ட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள விக்டோரியா பொது அரங்கினை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இரண்டு மாடி கொண்ட இக்கட்டடத்தின் நீளம் 48 மீட்டர், அகலம் 24 மீட்டர், பிரதானக் கூரையின் உயரம் 19 மீட்டர் மற்றும் மொத்த கோபுரத்தின் உயரம் 34 மீட்டர் ஆகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்த விக்டோரியா பொது அரங்கின் முழுக் கட்டடத்தையும் அதன் தொன்மை மாறாமல் பழுது பார்க்கும் பணிகள், நில அதிர்வினை தாங்கும் வகையில் மறுசீரமைப்பு பணிகள், முழு கூரையினையும் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், வெளிப்புறம் மற்றும் உட்புறம் மரத்தளம் மற்றும் மரப்படிக்கட்டுகளுடன் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், ஏற்கனவே உள்ள கட்டடத்தை தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல் உள்ளிட்ட மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, இதரப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வுகளில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு (மயிலாப்பூர்), ஜெ.கருணாநிதி (தியாகராயநகர்), எஸ்.இனிகோ இருதயராஜ் (திருச்சி (கிழக்கு)), துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர்கள் கூ.பி. ஜெயின், எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் திருமதி வசந்தி பரமசிவம் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பேரா.தி.இராசகோபாலன் எழுதிய

# 'கலைஞரின் பேனா' நூல் அறிமுக விழா!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தலைமையில் நடைபெறுகிறது!

திருச்சி, ஜூலை 19 -

பேராசிரியர் தி.இராசகோபாலன் எழுதிய 'கலைஞரின் பேனா' நூல் அறிமுக விழா தி. இராசகோபாலன்

நாளை (20.07.2025 - ஞாயிறு மாலை 6.30 மணிக்குத் திருச்சிராப் பள்ளித் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற உள்ளது.

விழாவிற்கு திருச்சிராப் பள்ளித் தமிழ்ச்சங்கம் பெ.உதயகுமார் வரவேற்புரையாற்றுகிறார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி தலைமை வகிக்கிறார்.

கவிதா ஜவகர், மேனாள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பெரும் பேராசிரியர் டாக்டர் பழனி அரங்கசாமி ஆகியோர் நூல் திறனாய்வு செய்கின்றனர்.

விழாவில் பேராசிரியர் தி. இராசகோபாலன் ஏற்புரையாற்றுகிறார்.

புலவர் இரா. வரதராசன் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம், துணைத் தலைவர் நன்றி கூறுகிறார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி பேரூரைச் சேர்ந்த சு.வீரவேல் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு,

கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18
நாள் : 18.07.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.





காஞ்சிபுரம் மாநகராட்சி, 27–வது வட்டம், கன்னிகாபுரத்தில் பகுதி நேர கூட்டுறவு நியாய விலைக் கடையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் துவக்கி வைத்தார்.அதன்பிறகு, பெரியார் நகர் பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய அங்கன்வாடி மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். உடன், மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், மாநகராட்சி ஆணையாளர் வே.நவேந்திரன், 2–வது பகுதிக் கழக செயலாளரும், மண்டலக் குழு தலைவருமான எஸ்.சந்துரு, மாமன்ற உறுப்பினர்கள் ஏ.சரவணன், வ.கமலக்கண்ணன், ப.சுரேஷ், பூங்கொடி தசரதன், வி.சுந்தரி, எஸ்.கௌதமி, கழக நிர்வாகிகள் பார்த்திபன், மோகன், சங்கர், நரசிம்மன், கோகுல், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் 151வது வார்டு, 348வது பாகத்தில் மண், மொழி,மானம் காக்க, "ஓரணியில் தமிழ் நாடு எனும் மாபெரும் கழக உறுப்பினர் சேர்க்கை நிகழ்வு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச. சங்கர் கணேஸ் எம்.சி., தலைமையில் தொகுதிப் பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம் உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபட்டார். உடன் கி.முரளி,ச.சுதா சங்கர் கணேஷ், கழக முன்னோடி தியாகராஜன், அ.தினேஷ், மோகன்ராஜ், பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.